**கவனிக்க.-** *27.12.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* II *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1844 - 2014 ජනවාරි මස 03 වැනි සිකුරාදා - 2014.01.03

*1844 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 3 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.-** (i) தொழில்நுட்பத்தையும் சமூக சேவையையும் உயர்த்துவதற்கான கல்வி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2014, சனவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, சனவரி 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி (விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரடிப்படை பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2014.01.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) கடினக் கொடுப்பனவுகள்.- ரூபா 2,000.
(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :
 (1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
 (2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 8,400.
(இ) வேறு கொடுப்பனவுகள் :
 (1) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;
 (2) சீருடைக் கொடுப்பனவு ரூபா 200.
 (3) ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 1,500 ;
 (4) அடிப்படை சம்பளத்தில் 25% ஊக்கப்படுத்தல் கொடுப்பனவு.
(அ) இலவச பயண வசதி ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;
(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;
(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலை களுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற் காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 19-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் ஒப்படைக் கும் கடைசித் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப் படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையிலும் தொழில்நுட்ப பாடத்திலும் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந் திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பொலிஸ் கொஸ்தாபல் சாரதி விண்ணப்பதாரிகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படும்.

* அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் முழுநேர 3 வருட மோட்டார் தொழில்நுட்ப பாடநெறி பின்பற்றி இருத்தல் மற்றும் அத்துறையில் 3 வருட அனுபவம் இருத்தல்

(இ) பௌதிக தகைமைகள்.- உயரம் : 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)

மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.

(ஈ) தொழில் தகைமைகள் :

(i) இலகு ரக வாகனங்களை அல்லது கனரக வாகனங் களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(ii) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங் காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப் படும்.-

* வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும் உடல் அவயங்களின் இயக்கத் திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்த மானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அதுபோலவே வீதிகள் போக்குவரத்து சைகை கள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு வேட்பாளரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங் களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப் படும்.

(ஈ) *பார்வை தொடர்பான தேவை*.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்*.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் விவாக மானவர்களாகக் கருதப்படுவர்) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை** :

*தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்பத் தகைமை பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்பயிற்சிகளில் பங்கு பற்றலாம், அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

*மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.*

- பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சை யில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்த பொலிஸ் கொஸ்தாபல் சாரதி விண்ணப்பதாரர்கள் சாரதி தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6. **தொழில்சார் பரீட்சை**.- *பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி*.- இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின்கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :-

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்
(ஆ) வீதிச்சட்ட அறிவுரை - 25 புள்ளிகள்
(இ) வாகனப் பராமரிப்பு சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்

*தொழில்சார் பரீட்சை*.- வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 25 புள்ளிகளும், வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப் பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப்புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுவர்.

**குறிப்பு**.- சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி தகுதிகாண் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டு வதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலயத்தில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

7. **வைத்தியப் பரிசோதனை**.- ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனை யில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

8. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்னடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப் பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

9. **அரசகரும மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல்** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர் கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப் படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமன திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப் படும்.

10. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங் கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) (i) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதி யற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப் படுவதற்கு ஆளாவார்.

(ii) நியமனம் உறுதிப்படுத்துவற்கு முன் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி மேற்போந்த பந்தி (அ) (i) இற்கு மேலதிகமாக பொலிஸ் கல்லூரியினால் நடாத்தப்படும் பார வண்டிகள் செலுத்துதல் தொடர்பான பரீட்சைகளிலும் சித்தியெய்துதல் வேண்டும்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவி யில் உறுதிப்படுத்தும்வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 1952/2006 என்ற இலக்க 2006.10.19 ஆந் திகதிய 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதியுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் கால நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்ப மிடல் வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுனர், பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்த வுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுனர் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி ;

14. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப் படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங் களை நேரடியாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவு களோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி (விசேட அதிரடிப்படை)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்ப தாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.
(ஊ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.
(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----
(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-
(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ) சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :-----.
(ஆ) சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதி :-----.
(இ) தகைமையுள்ள வாகன வகுப்பு :-----.
(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-
(I) -----.
(II) -----.

16. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக ? :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் இலங்கை நிரந்தர பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப் பிடுக ? :-----.

17. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவை செய்கிறீர் களா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை போன்ற விபரங்களின் பிரதியை இணைக்குக : -----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறா யின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீரா ? அவ்வா றாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றித ழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

19. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள் ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

20. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக.) :-----.

21. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தே கத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள

விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

1-49/1

---

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி (விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல் (விசேட அதிரடிப்படை) பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப் பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2014.01.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) கடினக் கொடுப்பனவுகள்.- ரூபா 2,000.

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;

(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 8,400.

(இ) வேறு கொடுப்பனவுகள் :

(1) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;

(2) சீருடைக் கொடுப்பனவு ரூபா 200.

(3) ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 1,500 ;

(4) அடிப்படை சம்பளத்தில் 25% ஊக்கப்படுத்தல் கொடுப்பனவு.

(அ) இலவச பயண வசதி ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ.த.(சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையிலும் தொழில்நுட்ப பாடத்திலும் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந் திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்துக்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க.பொ.த.(சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க.பொ.த.(சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதுப்படமாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள்.- உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு

கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்.-* விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் விவாக மானவர்களாகக் கருதப்படுவர்) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்பத் தகைமை பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்பயிற்சிகளில் பங்கு பற்றலாம், அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 – 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

- பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

  எழுத்துப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

  (அ) 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல் ;

  (ஆ) பொது அறிவும் பொது நுட்பமும் (1 மணித்தியாலம்).

6. **வைத்தியப் பரிசோதனை.-** ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரியின் நன்னடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப் பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரசகரும மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப் படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமன திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப் படும்.

9. **நியமனக் கொள்கைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத் திற்கு உட்பட்டதுமாகும். நீங்கள் விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங் கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதி யற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப் படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும்வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 1952/2006 என்ற இலக்க 2006.10.19 ஆந் திகதிய 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதியுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் கால நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்ப மிடல் வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுனர், பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்த வுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஐ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணபத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப் பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (விசேட அதிரடிப்படை)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்ப தாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் பிரிவு :-----.
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு :-----.
கிராம சேவையாளர் பிரிவு :-----.
(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.
(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----
(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-
(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(I) -----.
(II) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் றிசேவ் பொலிஸ் சேவையில் அல்லது நிரந்தர பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக ? :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் இலங்கை பொலிஸ் அல்லது றிசேவ் பொலிஸ் சேவையில் கடமையாற்றியுள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.

16. நீங்கள் தற்போது றிசேவ் பொலிஸ் சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் போன்ற விபரங்களைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக : -----.

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதங் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் தொண்டர் படையினராக சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக.) :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? (அவ்வாறாயின் விபரங்களைத் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையே னும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

1-49/2

---

**இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்ளல்**

இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உப புகையிரத நிலைய அதிபர் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள உப புகையிரத நிலையங்களுக்காக வேண்டி விண்ணப்பம் கோரப்படுகின்றது :-

1. தெல்வத்தை
2. உனவட்டுன்ன
3. கம்மான
4. அருக்வத்த
5. முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்
6. துடெல்ல
7. பொரலெஸ்ஸ
8. காக்கபள்ளிய
9. புளிச்சகுளம்
10. ரத்கம
11. தெமட்டகொட
12. கட்டுகொட
13. உடஹமுல்ல
14. புஞ்ஜொமுவ
15. பெகிரிவத்த
16. பத்துலுஓய
17. கத்தலுவ
18. சரசவிஉயன
19. ஹொரிவில
20. உடத்தாவல
21. கந்தேகொட
22. ஹெட்டிமுல்ல
23. எழுதுமட்டுவால்
24. மிருசுவில்
25. நாவின்ன
26. ஹபராதுவ
27. மீசாலை
28. சங்கத்தானை
29. தச்சன்தோப்பு
30. புனுக்குளம்
31. கொக்குவில்
32. இணுவில்
33. மல்லாகம்
34. தெல்லிப்பளை
35. மாவிட்டபுரம்
36. மாந்தோட்டம்
37. திருக்கேதீஸ்வரம்
38. தோட்டவெளி

39. அனுராதபுரம் புதிய நகரம்
40. கடதாசி நகரம்
41. தும்மோதர
42. வலகும்புற
43. தேவாபுரம்
44. பெரகும்புர
45. மகலேகொட
46. வடக்கு பயாகல
47. ஹதரஸ்கொட்டுவ
48. ஆந்தாகொல
49. பூனேவ
50. ஆரச்சிகட்டுவ
51. கோட்டை வீதி
52. அஹுங்கல்ல
53. கித்தல்எல்ல
54. குமாரகந்த
55. அகுரல
56. கொஸ்ஹின்ன
57. பனலிய
58. பெரகும்உயன
59. வில்வத்தை
60. தாரலுவ
61. பல்லேதளவின்ன
62. மஹஇதுருவ
63. பனாகொட
64. மானுவன்கம
65. பின்னவல
66. கொரலவெல்ல
67. மெதகம
68. உக்கல்ல
69. நெலும்பொகுன
70. சவரான
71. மீகம்மன

1. **உப புகையிரத நிலைய அதிபர்களின் கடமை விபரம்.**- பிரவேசப்பத்திர விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக சேவையில் ஈடுபடுத்தப்படும் பிரதிநிதிகள் அந்தந்த நிலையங்களில் நிறுத்தப்படும் புகையிரதங்களின்படி 24 மணி நேரமும் பயணச்சீட்டு விற்பனை செய்தல் வேண்டும். பார்சல் கையேற்றல், கிடைக்கும் பார்சல்களை உரியவர்களிடம் ஒப்படைத்தல், தினமும் ஒன்றுசேரும் பணத்தை பிரதம புகையிரத கணக்காளருக்கு அனுப்பிவைத்தல், நிலையத்தை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் புகையிரத முகாமையாளரினால் சந்தர்ப்பத் திற்கேற்ப ஒப்படைக்கப்படும் வேறு கடமைகளும் இப்பிரதிநிதிகளின் பொதுவான கடமையாகும்.

2. **கொடுப்பனவு.**- நிரந்தர சேவையாளர் தொகைக்கு உட்படாத பதவியாகும். தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு அந்தந்த நிலையத்தின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தரகுப்பணமும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்படும். மேலும் ஆரம்ப தரகுப் பணம் ரூபா 310 ஆவதுடன் ஆரம்ப தரகுப் பணத்துடன் வழங்கப்படும் கொடுப்பனவு குறைந்தளவு ரூபா 5,329 இற்குக் குறையாததாகும்.

3. ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்படிவத்தில் ஒரு நிலையத்தை மாத்திரம் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டியதுடன் ஒன்றுக்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் முதலாவது குறிப்பிடப்பட்டுள்ள நிலையத்திற்கு விண்ணப்பித்துள்ளதாக கருதப்படும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினமான 2014.02.03 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

5. **கல்வித் தராதரம்.**- க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலத்துடன் கணிதம் உட்பட சிறப்பு சித்தி நான்குடன் ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. **வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து 20 கி. மீ. தூரத்திற்குள் (நேரடி தூரம்) குறைந்தது 5 வருட காலம் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். நியமனக் கடிதம் கிடைப்பதற்கு முன்பு இதுபற்றி உறுதிப்படுத்தும் பொருட்டு நம்பத்தகுந்த சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். (கிராமசேவையாளர் சான்றிதழ், பிரதேச செயலாளரின் சான்றிதழ், தேர்தல் இடாப்பு பிரதி போன்றவையாகும்.) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப் படும் முகவரி நிரந்தர முகவரியாக இருக்க வேண்டியதுடன் புகையிரத நிலையத்திற்குள்ள நேரடி தூரத்தை கணக்கிட வேண்டியது அம்முகவரியில் இருந்தாகும்.

(ii) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாததாகவும் மார்பளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) உப புகையிரத நிலைய அதிபராக தற்போது கடமை புரிபவர் களுக்கும் அல்லது அவ்வாறு சேவை செய்து சேவை முடிவுறுத்துப் பட்டவர்களுக்கும் இதற்காக வேண்டி விண்ணப் பிக்க முடியாது.

(v) விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியமும் சிறந்த கண் பார்வையும் உடையவர் என வைத்திய பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்பே தேர்ந்தெடுக்கப்படுவர். சிறந்த கண் பார்வை உடையவராக இருப்பது கட்டாயமாகும்.

7. **தேர்ந்தெடுக்கப்படும் முறை.**- புகையிரத முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். போட்டிப் பரீட்சையின்போது சகல விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்கீழ் இரு கேள்வித்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். பரீட்சையில் தகுதிபெறுவதற்காக வேண்டி ஒவ்வொரு விடயத்திலும் 40 வீத புள்ளிகளைப் பெறல் வேண்டும் :-

(i) மொழித் தேர்ச்சி.- (காலம் : 1 மணித்தியாலம்) - முழுப்புள்ளி 100 ஆகும். விளங்கிக்கொள்ளுதலுடன், சரியான மொழி நடையை பிரயோகித்தல் சம்பந்தமாக விடயத்துடன் தொடர் புடைய கேள்விகளை உள்ளடக்கிய கேள்வித்தாளாகும்.

(ii) நுண்ணறிவு.- (காலம் : 1 மணித்தியாலம்) - முழுப்புள்ளி 100 ஆகும். கேள்வித்தாளிலேயே விடை எழுதவேண்டிய கணித குளறுபாடு, மொழித் தொகுதி, அட்டவணை, பொருந்திப் பார்த்தல் குறிப்பு, படம், வரைபு போன்றவற்றின் உதவியுடன் தர்க்க ரீதியாக சரியான உடனடி தீர்மானம் எடுக்கும் சிறந்த ஆற்றலை பரிசீலனை செய்யும் பல்தெரிவிலான கேள்வித் தாளாகும்.

**குறிப்பு**.- (i) போட்டிப் பரீட்சையில் தகுதிபெற்றவர்கள் மத்தியில் அந்தந்த பயணச்சீட்டு விற்பனை நிலையத்தின்படி கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரி குறிப்பிட்ட பயணச்சீட்டு விற்பனை நிலையத்திற்காக நியமிப்பதற்காக வேண்டி தகுதிகளை ஆராயும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

(ii) நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தகுதிபெற்றவர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் புகையிரத பயணச்சீட்டு விற்பனை முகவரின்கீழ் அல்லது உப புகையிரத நிலைய அதிபரின்கீழ் அனுமதிக் கப்பட்ட பதிலீட்டாளராக சேவை செய்துள்ள விண்ணப்பதாரிக்கு முதலிடம் வழங்கப்படும். அவ்வாறில்லாவிடின் குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து மிகவும் கிட்டிய தூரத்தில் வசிப்பவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**8. சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை :**

(அ) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கும்படி அல்லது குறைந்தது ரூபா 25,000 ஆன தொகை பாதுகாப்பு பிணைப்பணமாக புகையிரத முகாமை யாளரின் பெயருக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டியதுடன் புகையிரத முகாமையாளருடன் கையொப்பமிடும் ஒப்பந்தத் தின் நிபந்தனைகளின்படியும் கடமை மேற்கொள்ளல் வேண்டும். அவ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறுதல் சேவையை முடிவுறுத்துவதற்கு காரணமாக அமையும்.

(ஆ) இது ஒப்பந்த அடிப்படையிலானதுடன் வருடத்திற்கு வருடம் இவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்கப்படாதவிடத்து ஒப்பந்தம் முடிவுபெறும்.

(இ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தான் நியமிக்கப்பட வுள்ள நிலையத்தின் கடமைகள் பற்றி தெரிந்துகொள்வ தற்காக வேண்டி புகையிரத முகாமையாளரினால் கூறப்படும் புகையிரத நிலையத்தில் 14 நாட்கள் பயிற்சியைப் பெறல் வேண்டும். இப்பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(ஈ) தனக்குப் பதிலாக உதவிக்காக வேலை செய்வதற்கு புகையிரத திணைக்களத்தின் அனுமதியுடன் உதவியாளர் ஒருவரை அனுமதித்துக்கொள்ள முடிவதுடன் உதவியாளருக்காக எவ்வித கொடுப்பனவும் திணைக்களத்தினால் வழங்கப்பட மாட்டாது. நிலையத்தின் முழுப்பொறுப்பும் உப புகையிரத நிலைய அதிபரையே சாரும்.

(உ) பயிற்சியைப் பெறும் காலவெல்லைக்குள் அல்லது உப புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றும் காலவெல்லைக் குள் அல்லது நேர்முகப் பரீட்சையின்போது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியினால்/அவருக் காக தரப்பட்டுள்ள/வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரி யானதெனவும் அங்கீகாரம் அற்றதெனவும் தெரியவருமிடத்து எவ் அறிவித்தலுமின்றியும் நஷ்டஈடுகள் எதுவுமின்றியும் உடனடியாக அவரின் சேவையை பெறல் முடிவுறுத்தப்படும்.

(ஊ) உப புகையிரத நிலைய அதிபராக தேர்ந்தெடுக்கப்படுபவர் அத்தேர்ந்தெடுப்பு மூலம் புகையிரத திணைக்களத்தில் எந்த நிரந்தர பதவியையும் வழங்குவதற்கு திணைக்களம் பொறுப்புடைய தல்ல.

**9. சேவை நிபந்தனை**.- (i) கையொப்பமிடும் ஒப்பந்தத்தில் ஏதேனும் நிபந்தனை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அவரின் நியமனம் முடிவுறுத்தப்படும்.

(ii) புகையிரத முகாமையாளரினால் காலத்திற்கு காலம் இடப்படும் நிபந்தனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்படிவதற்கு இணங்குதல் வேண்டும்.

**10. பரீட்சைக் கட்டணம்**.- சகல விண்ணப்பதாரிகளும் மீண்டும் வழங்கப்படாத ரூபா 500 ஆன தொகை பரீட்சைக் கட்டணமாக புகையிரத பொது முகாமையாளர் எனும் பெயருக்கு மாற்றப்படும் அலுவலகம், ''மருதானை'' எனக் குறிப்பிட்டு பெறப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வேறு விதங்களில் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். பூரணமற்றதும், முறையற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

**11. விண்ணப்பப்படிவம் முன்வைத்தல்**.- தட்டச்சு கடதாசி அளவுள்ள (ஏ-4) கடதாசியில் விண்ணப்பதாரியினாலேயே விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், உப புகையிரத நிலைய அதிபர் பதவிக்கான விண்ணப்பப்படிவம் கோரும் புகையிரத நிலையத்தை குறிப்பிட்டு ''புகையிரத முகாமையாளர், தபால் பெட்டி இல. 355, புகையிரத முகாமையாளர் அலுவலகம், கொழும்பு 10'' எனும் முகவரிக்கு 2014.02.03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளது).

**12. விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பப் படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்/அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடத்திற்கு ரூபா 2,37,060 இற்கு குறையாத ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத முகாமையாளர்.

புகையிரத முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2013.12.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்ளல்**

1. விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் :

   (i) முழுப்பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. நிரந்தர முகவரி :-

   (i) சிங்களத்தில்/தமிழில் :----.
   (ii) ஆங்கிலத்தில் :----.
   (iii) தொலைபேசி இலக்கம் :- (வீடு) :----, கையடக்க :----.

3. பிறந்த திகதி :

   03.02.2014 ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

5. மாவட்டம் :

6. பிரதேச செயலாளர் பிரிவு :

   கிராமசேவையாளர் பிரிவு :

7. உமது நிரந்தர வசிப்பிடத்திலிருந்து நீர் விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையத்திற்குள்ள தூரம் (நேரடி தூரம்) கி. மீ. மூலம் குறிப்பிடவும் :----.

8. கல்வித் தராதரம் :
   க. பொ. த. (சா. தரம்) :

| வருடமும் சுட்டெண்ணும் | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. வேறு தகைமைகள் :----.

10. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :

11. நீர் ஏதாவது குற்றம் காரணமாக நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டிருப்பின் விபரம் தருக :----.

12. .................................................... தபால் அலுவலகத்தில் ரூபா 500 ஐச் செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் ................... ஐ உடைய காசுக் கட்டளையின் மூலப்பிரதியை இணைத்து அனுப்புகிறேன். (வேறு வழிகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப் பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும்.) :----.

13. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

   (அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிமொழிகிறேன்.

   (ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானதெனவும் பிழையானதெனவும் தான் நியமிக்கப்படுவதற்கு முன்பு கண்டு பிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதுடன் நியமனம் பெறப்பட்ட பிறகு கண்டு பிடிக்கப்படுமிடத்து எனது சேவையை முடிவுறுத்துவதற்கு நான் கீழ்ப்படிவதாகவும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

   இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் .................... ஐ உடைய திரு. ............................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும் அவர் இன்று என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(இறப்பர் இலச்சினையை பொறிக்கவும்.)

1-98

---

## நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சு

நீர்பாசனத் திணைக்களம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவி**

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கை பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் ''நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசன திணைக்களம், இல. 230, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7'' என்ற முகவரிக்கு 2014.01.24 ஆந் திகதியன்று அல்லது

அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என எழுதி அனுப்புதல் வேண்டும்.

இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

*2.* **சம்பள அளவுத்திட்டம்**.- *பயிற்சிநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்த பின்னர் மாதாந்த திரட்டிய சம்பளம் : ரூபா 15,005-4X180-14X240- ரூபா 19,025 (இது மாதாந்த சம்பள நிலை ரூ. 16,205 க்கு முன்னர் வினைத் திறமைகாண் பரீட்சையை உள்ளடக்கியுள்ளது.)*

*3.* **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ஆ) 2014.01.24 ஆந் திகதியன்று 30 வயதுக்கு மேற்படாமலும் 18 வயதுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். (மாகாண, அரச சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லையானது ஏற்புடைய தன்று.) ;

(இ) நன்னடத்தை உடையவராயிருத்தல் ;

(ஈ) பரீட்சார்த்தி நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடிய உடல் தேகாரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கென அரசாங்க மருத்துவ பரிசோதனைக்குட்படல் வேண்டும் ;

(உ) பரீட்சார்த்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள I அல்லது II இல் ஏதாவது ஒரு கல்வித் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆங்கில மொழி, விஞ்ஞானம் ஆகிய பாடத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட் சையில் வேறு ஏதாவது ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் பௌதீகவியல், தூயகணிதம் உட்பட நான்கு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

புதிய பாடத்திட்டத்திற்கிணங்க க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதீகவியல் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) கட்டுப்பெத்த பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து பெற்றுக் கொள்ளப் பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் (குடிசார் பொறியியல்) அத்துடன் உரிய துறையில் ஒரு வருட பிரயோகப் பரீட்சையைப் பூர்த்தி செய்ததுடன் அளவையியல், மட்டமிடல், நீர்ப்பாசனப் பொறியியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தமைக் கான உரிய சான்றிதழ்கள்.

(iii) மட்டக்குளி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் நீர்ப் பாசனப் பொறியியல் மற்றும் அளவையியல் மற்றும் மட்டமிடல் ஆகிய பாடங்கள் உட்பட குடிசார் பொறி யியல் துறைக்குரிய உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE) சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iv) கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நீர்ப்பாசனப் பொறியியல் மற்றும் அளவையியல் மற்றும் மட்டமிடல் ஆகிய பாடங்கள் உட்பட குடிசார் பொறியியல் துறைக்குரிய உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE) சான்றிதழ் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- பயிற்சிநெறியை வெற்றிகரமாக 2012.01.23 ஆந் திகதிக்கு முன் பூர்த்திசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

*4.* **ஆட்சேர்க்கப்படும் முறை**.- (அ) ஆட்சேர்ப்பானது பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 15/ 90 இற்கிணங்கவும் தாபன விதிக்கோவைக்கிணங்கவும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) (i) பயிலுனர்கள் பிரிவு 3உ (1) இன்கீழ் தகைமைகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கல்கமுவ திணைக்கள பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டு வருட கால முழுநேர வதிவிடப் பயிற்சி வழங்கப்படும். குறித்த பரீட்சையில் இறுதிப் பரீட்சை உள்ளடங்கலாக குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடைந்த பயிலுனர்களுக்கு பிரயோகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதில் சித்தியடைந்தவர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் சான்றிதழ்களைப் பெறும் உரித்துடையவராவர்.

(ii) நீர்ப்பாசனப் பயிலுனர்கள் குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடையத் தவறின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின்படி பயிற்சி நெறியைத் தொடர அனுமதிக்கப்படுவர். இச்சித்தியின்மைக்குக் காரணமாக கடமையில் அலட்சியம், ஆர்வமின்மை, வரவில் பலவீனம் போன்றவையாக இருக்கக் கூடாது. சித்தியடையத் தவறிய பயிலுனர்கள் இறுதிப் பரீட்சையுட்பட அனைத்துப் பரீட்சைகளிலும் சித்தியடைதல் வேண்டும். இப்பரீட்சையானது பயிற்சிநெறி நீடிப்புக்காலம் முடிவடைந்ததும் இடம்பெறும். இப்பரீட்சையிலும் இவர்கள் சித்தியடையத் தவறின் அவர்களது சேவை முடிவுபெறும்.

(iii) பயிற்சிக் காலத்தின்போது கருத்தரங்குகளுக்கு அல்லது உரைகளுக்கு பயிலுனர்கள் 80% குறைந்தபட்சம் வருகை தந்து பயிற்சிநெறியில் திருப்திகரமான பதிவையும் கொண்டிராதவர்கள் குறித்த பரீட்சையில் அமர்வதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பயிற்சிநெறியும் முடிவுறுத்தப்படும்.

(iv) பிரிவு 3உ (ii), (iii) அல்லது (iv) கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் பயிலுனர்கள் (06) ஆறுமாத கால பயிற்சிநெறியின் முடிவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வேண்டப்படும் பிரயோகப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இப்பயிற்சி நெறியானது, பிரசங் கங்களையும் உரைகளையும் பிரயோகப் பயிற்சியையும் கொண்டதாகும்.

(V) பயிலுனர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வெளிக்களப் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யின் ஆட்சேர்ப்புக்குப் பின் வேண்டப்படும் ஆறுமாத கால பயிற்சிநெறி விலக்களிக்கப்படும். அத்தோடு அவர்கள் அனைத்து பிரயோகப் பரீட்சையிலும் சித்தியடைதல் அவசியமாகும்.

(இ) அனைத்து பிரசங்கங்களும் அல்லது உரைகளும் பயிற்சிநெறிகளும் ஆங்கில மொழியிலேயே நடாத்தப்படும்.

(ஈ) பயிற்சிநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர்கள் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நியமிக்கப்படுவர்.

**5. சேவை நிபந்தனைகள் :**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பங்களிப்பு ஓய்வூதிய சம்பள நிதிக்குக் கொடுப்பனவு செலுத்தப்படல் வேண்டும். தற்போது ஓய்வூதியப் பதவிகளில் உள்ளவர்கள் ஓய்வூதியம் பெற உரித்துடையவராவர்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் முதலில் நீர்ப்பாசனப் பயிலுனர்களாக ஆட்சேர்க்கப்படுவர்.

(இ) நீர்ப்பாசனப் பயிலுனர்களுக்கு பயிற்சிக்காலத்தின்போது கொடுப்பனவு ஒன்று செலுத்தப்படும். பிரிவு 3உ(i) கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் நீர்ப்பாசனப் பயிலுனர்கள் பயிற்சிக்காலம் முழுவதும் கீழ்க்காணப்படும் கொடுப்பனவைப் பெறுவர் :

முதலாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 12,920

இரண்டாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 13,040

மூன்றாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 13,160.

பிரிவு 3உ (ii), (iii) அல்லது (iv) கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் பயிலுனர்களுக்கு அவர்களது ஆறுமாத கால பயிற்சிநெறியின்போது மாதாந்தம் ரூ. 13,160 கொடுப்பனவு செய்யப்படும். இக்கொடுப்பனவானது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் நீடிக்கப்பட்ட பயிற்சிநெறிக் காலத்துக்கும் தொடர்ந்து வழங்கப்படுவதோடு ஏனைய சலுகைகளுக்கோ உரிமைகளுக்கோ உரித்துரிமை பெறமாட்டார்கள்.

(ஈ) நீர்ப்பாசனப் பயிலுனர்கள் அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் தாபன விதிக்கோவை மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கு உட்படல் வேண்டும். அவர்களுக்கு லீவு அல்லது புகையிரத அனுமதிப்பத்திரங்கள் என்பன பயிற்சிக்காலத்தின்போது உரித்துடையதாகாது.

(உ) பயிலுனர்கள் தமது பயிற்சிக்காலம் முடிந்த பின்னர் இவர்கள் வகுப்பு II தரம் II பொறியியல் உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்படுவதுடன் அவர்களுக்கு ஆரம்ப நியமனத் திகதியிலிருந்து (03) மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலமாகக் கணிக்கப்படும்.

(ஊ) தாபன விதிக்கோவையின் II அத்தியாயத்தின் பிரிவு 10-12 வரையான ஏற்பாடுகள் இச்சேவைக்கு உரித்துடையதாகும்.

(எ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பொறியியல் உதவியாளராக 5 வருடங்கள் கட்டாய சேவை செய்வதற்கு உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடுமாறு வேண்டப்படுவர். உடன்படிக்கைக்கிணங்க அவ் உத்தியோகத்தர் கட்டாயகால சேவை நிறைவேற்றத்தவறின், அவர் உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள மொத்தத் தொகையையும் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும்.

6. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றுப்பத்திரங்களின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் ;

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை சான்றிதழ் ;

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சை சான்றிதழ் ;

(ஈ) பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ;

(உ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ் 3 அதில் ஒன்று இறுதியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரின் மூலமும் மற்றது நிரந்தர வதிவிடப் பிரதேச கிராமசேவை அலுவலரிடமிருந்தும் பெறப்படல் வேண்டும்.

**குறிப்பு**.- மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் திருப்பியனுப்பப்படமாட்டாது.

7. மாகாண அல்லது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்கள் கொழும்பில் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைக்கென தமது சொந்தச் செலவிலேயே சமுகமளித்தல் வேண்டும்.

9. தேவை ஏற்படுமிடத்து நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்நேரத்திலும் சேவையாற்ற தயாராக இருத்தல் வேண்டும். குறிப்பாக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கீழ்வரும் நிலையங்களில் ஏதாவது ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் சேவை செய்யுமாறு கேட்கப்படுவர். அவ்வாறு விருப்பமில்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய தேவையில்லை. நிலையங்களாவன- நீர்ப்பாசன பிராந்திய அலுவலகங்களான அம்பாறை, பொத்துவில், கல்முனை, அக்கரைப்பற்று, அனுராதபுரம், பதவிய, இராஜாங்கனய, ஹுருளுவெவ, மாப்பாகட, பதுளை, கந்தேகெட்டிய, நவகிரி, ஊறுகாமம், திஸ்ஸ, வீரகெட்டிய, ஹம்பாந்தோட்டை, வெள்ளவாய, பிபிலை, மொனராகலை, பொலன்னறுவை, கவ்துள்ள, எலஹெர, இங்கினிமிட்டிய, புத்தளம், மூதூர், கந்தளாய், கோமரங்கடவளை, முருங்கன், வவுனியா மற்றும் திட்ட அலுவலகங்களுக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வேலைத்தலங்கள் அனைத்தும் சாதாரணமாக மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் பிரயாண வசதிகள், இருப்பிட வசதிகள், மிகவும் குறைவாக காணப்படும் இடங்களில் அமைந்துள்ளதென்பதை விண்ணப்பதாரர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

10. விண்ணப்பத்தில் ஏதாவது பொய்த்தகவல்கள் கொடுக்கப்பட்டு ஆட்சேர்ப்புக்கு முன் தெரியவரின் பரீட்சார்த்தியுரிமையானது இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின் இவ்வாறான பொய்த்தகவல்கள் தெரியவரின் அவரது சேவை முற்றுப்பெறும்.

11. அரச பதவிகள் நியமனங்களுக்குரிய ஒழுங்குவிதிகளை இலங்கை அரசாங்க வர்த்தமானி பகுதி I : தொகுதி (IIஅ) இல் பார்க்க.

எந்திரி. பத்ரா கமலதாஸ,
நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல. 230, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7,
2013.12.19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு**

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

*நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவி*

1. (அ) முழுப்பெயர் (தமிழ்) :----.
   (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்):----.
   (இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

2. பால் :----.

3. (அ) தபால் முகவரி (தமிழ் எழுத்துக்களில்) :----.
   (ஆ) தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (இ) நிரந்தர முகவரி :----.
   (ஈ) தொலைபேசி இல. :----.
   (உ) கையடக்க தொலைபேசி இல. :----.
   (ஊ) மின்னஞ்சல் முகவரி :----.

4. வதிவிட மாவட்டம் :----.

5. பிரதேச செயலாளர் பிரிவு :----.

6. பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழ் பிரதியொன்றை இணைக்கவும்) :
   (அ) வருடம் ----- மாதம் ----- திகதி -----.
   (ஆ) பிறந்த இடம் :----.
   (இ) 2014.01.24 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் ------ மாதங்கள் ------ நாட்கள் ------.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

8. நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? : (ஆம்/இல்லை) :----.

இனம் :

| | |
|---|---|
| சிங்களவர் | |
| இலங்கைத் தமிழர் | |
| இந்தியத் தமிழர் | |
| முஸ்லிம் | |
| ஏனையோர் | |

9. கல்வித் தகைமைகள் (சான்றுப்பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) :
   9.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :
   முதல் அமர்வு :
   சுட்டெண் :----, வருடம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

2 ஆம் அமர்வு (தேவைப்படின்) :
சுட்டெண் :----, வருடம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

9.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை :
சுட்டெண் :----, வருடம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. கணிதம் | |
| 2. பௌதீகவியல் | |
| 3. | |
| 4. | |

10. தொழில்நுட்ப தகைமைகள் (சான்றுப்பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்). (தயவுசெய்து பயிற்சிநெறியின் பெயரையும் தொழில் நுட்ப நிறுவனத்தின் பெயரையும் தருக.) :----.

11. நீர் அரச திணைக்களத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் முன்னர் சேவையாற்றியிருப்பின், நீர் ஏன் இராஜினாமா/சேவையை விட்டுவிலகல்/ சேவையை தொடராமை/ சேவை நீக்கம்/ ஏற்பட்ட தற்கான காரணத்தைக் குறிப்பிடவும் : ----.

12. தற்போது உத்தியோகத்திலிருப்பின் கீழ்வரும் விபரங்களைத் தருக :
   (அ) பதவி :----.
   (ஆ) நிறுவனம் :----.
   (இ) நியமனத் திகதி :----.
   (ஈ) தொழிலின் தன்மை :----.

13. என்னால் மேலே கூறப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மை யானதும், சரியானதும் என உறுதி கூறுகின்றேன். மேலும் இவ்விண்ணப்பத்தில் பிழையான தகவல்கள் ஏதும் உள்ளடக்கப் பட்டிருப்பின் அது தகைமையற்றதாகும் என நான் நன்கு அறிவேன். அத்தோடு அது ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவரின் எந்தவித நஷ்டஈடுமின்றி உத்தியோகம் முடிவடை வதற்கு உரிய காரணமாக அமையும் என்பதையும் அறிவேன்.

----,

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள தலைவரின் விதப்புரை**

(அரசாங்க திணைக்களங்களில் மாகாண சபையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

................................ என்பவர் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் தொழில் புரிகிறார். இவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இதில் வேண்டப்பட்டுள்ள தேவைகளுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க இவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர் எனவும் சான்றுபடுத்துகின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படின் விடுவிக்க முடியும்/முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவன/அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பெயர் :----.
முகவரி :----.
பதவி :----.
திகதி :----.

*1-143*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

***11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

***14. 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

***முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.***

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை-2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***சனவரி*** | .. | வெள்ளி | 03.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2013 |
| | | வெள்ளி | 10.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2013 |
| | | வெள்ளி | 17.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2014 |
| | | வெள்ளி | 24.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.01.2014 |
| | | வெள்ளி | 31.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2014 |
| ***பெப்புருவரி*** | .. | வெள்ளி | 07.02.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.01.2014 |
| | | வியாழன் | 13.02.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.01.2014 |
| | | வெள்ளி | 21.02.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.02.2014 |
| | | வெள்ளி | 28.02.2014 | .. | நண்பகல் 12 | வியாழன் | 13.02.2014 |
| ***மாச்சு*** | .. | வெள்ளி | 07.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.02.2014 |
| | | வெள்ளி | 14.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.02.2014 |
| | | வெள்ளி | 21.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.03.2014 |
| | | வெள்ளி | 28.03.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.03.2014 |

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.